## பேச்சு - பிரிவு 1

# சுவாமி விபுலாநந்தர்

இலங்கையில் பிறந்து தமிழ்மொழிக்கும் சமூகத்திற்கும் தொண்டு புரிந்த பெரியார்களில் சுவாமி விபுலாநந்தர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இவர் மட்டக்களப்புக் காரைதீவு என்னும் ஊரில், 1892 ஆம் ஆண்டில் பிறந்தார். மயில்வாகனன் என்பது இவரது இளமைப் பெயர் ஆகும்.

சுவாமிகள் இளமைக் காலம் முதலாகத் தமிழ், ஆங்கிலம், வடமொழி, லத்தின் முதலான பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். அவர் இலண்டன் கேம்பிரிட்ச் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியாகச் சித்தியடைந்து விஞ்ஞான அறிவையும் பெற்றுக்கொண்டார்,

சுவாமிகள், மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, கல்முனை கத்தோலிக்கமிசன் பாடசாலை, யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரி ஆகியனவற்றில் ஆசிரியராகக் கடமை ஆற்றினார். மானிப்பாய் இந்துக் கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகப் பணிபுரிந்தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பணிபுரியும் போது இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து துறவறம் பூண்டார். அங்கு அவருக்கு விபுலாநந்தர் என்னும் தீட்சைப்பெயர் சூட்டப்பட்டது.

சுவாமி விபுலாநந்தர், ஈழத்தின் கிழக்கிலும் வடக்கிலும் மலையகத்திலும் பல பாடசாலைகளை நிறுவி, ஏழை மக்களின் உயர்வுக்காகப் பாடுபட்டார். அவரது பணிகள் என்றும் நினைவுகொள்ளத் தக்கவையாகும்.

நன்றி. வணக்கம்